# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்)

**1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் குறித்த சில தேவைப்பாடுகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு விலக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2017, மே மாதம் 03 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *177 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 005184 - 475 (2017/05)

*ச. வ. ஓ. 56/2015*

**1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் குறித்த சில தேவைப்பாடுகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு விலக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

முன்னுரை.

*கடந்த அண்மைக்காலத்தின்போது பயங்கரவாதி போராளி அல்லது வேறு குழுவின் நடவடிக்கைகள் காரணமாக குறித்த சில ஆட்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக வந்துள்ளனராதலாலும்:*

*அத்துடன் வாக்களிப்பதற்குத் தகவுடைய உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக வருவதற்கு முன்னர் அவர்களின் நிரந்தர வதிவிடங்கள் எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்திருந்தனவோ அந்தத் தேர்தல் மாவட்டத்தில் அவர்கள் தமது வாக்குரிமைக்கான உரிமையைப் பிரயோகிப்பதனை இயலச்செய்வதற்கு அரசானது கொள்கையொன்றை வகுத்தமைத் துள்ளதாதலாலும்:*

*அத்துடன் அத்தகைய கொள்கைக்குப் பயன்கொடுப்பதற்கென விசேட சட்ட ஏற்பாடுகளைச் செய்தல் இப்போது அவசியமாக வந்துள்ளதாதலாலும் :*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் பதிவு செய்வதற்குத் தகவுடை யோராதல்.

**2.** (1) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் மற்றும் அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரைக்கமையவும்,-

(அ) உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளொருவராக இருக்கின்ற வரான அல்லது இருந்தவரான;

2 -PL 005109 - 475 (2017/03)

(ஆ) 2009 ஆம் ஆண்டின் இறுதிவரையான ஏதேனும் ஆண்டுக்கு வட மாகாணத்திலுள்ள அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர்கள் இடாப்பில் அவரது பெயர் காணப்படுகின்றவரான; அத்துடன்

(இ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவுசெய்யப்பட்டிராதவரான,

எவரேனும் இலங்கைப் பிரசை (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றி எண்பிப்பதன்மீதும், அவர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளொருவராக இருக்கின்றார் அல்லது இருந்துள்ளார் என்ற பயன்பட அவர் தற்போது வதிகின்ற இடப்பரப்பின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் காண்பிப்பதன்மீதும், 2009, மே 18 ஆந் தேதிக்கு முன்னர் அவர் எந்தத் தேர்தல் மாவட்டத்தினுள் நிரந்தரமாக வதிவுள்ளவராகவிருந்தாரோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் தேருநர்கள் இடாப்பில் பதிவுசெய்யப்படுவதற்கென அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பமானது வர்த்தமானியிலும் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளிலான ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வுட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உரித்தானது (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரசையொருவரின் -

(அ) அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த தேதியன்று பதினெட்டு வயதை எய்தியிராத வர்களும் அத்துடன் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பில் மீளாய்வு எத்தேதியன்று தொடங்கியதோ அத் தேதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களுமான;

(ஆ) அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த பின்னர் பிறந்தவர்களும் மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பில் மீளாய்வு எத்தேதியன்று தொடங்கியதோ அத்தேதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களுமான; அத்துடன்

(இ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவர்களது பெயர் பதிவு செய்யப்பட்டிராதவர்களுமான,

பிள்ளைகளுக்கு, மேலேயுள்ள (அ) அல்லது (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களின் எண்பிப்பானது, பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்பட்ட அத்தகைய பிள்ளையின் பிறப்புச் சான்றிதழையும் மற்றும் அவர் தற்போது வதிகின்ற இடப்பரப்பின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றினையும் காண்பிப்பதன்மீது நீடிக்கப்படுதல் வேண்டும்.

உரிமைக் கோரிக்கைகள் பற்றிய நிரல்.

**3.** (1) பதிவு அலுவலர், 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள் பற்றிய நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நிரல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென்றும், பதிவு அலுவலரின் அலுவலகத்தில் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் அது பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதென்றும், வர்த்தமானியிலும் மற்றும் சிங்கள, ஆங்கில, தமிழ் மொழிகளிலான ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலும் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

(2) (அ) வட மாகாணத்திலுள்ள அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான ஏதேனும் தேருநர்கள் இடாப்பில் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளவரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரலில் அவரது பெயர் காணப்படாதிருப்பவருமான எவரேனுமாள், வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்தினுள் பதிவு அலுவலருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (8) முதல் (16) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், பதிவு அலுவலரின் முடிபுகளுக்கெதிரான ஆட்சேபனைகளுக்கும் மேன்முறையீடுகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) அத்தகைய மேன்முறையீட்டின்மீதும் விசாரணையின்மீதும், பதிவு அலுவலர், 4 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறைநிரப்பு இடாப்பில் அத்தகைய மேன்முறையீட்டாளரின் பெயரைச் சேர்க்காது விடுவதற்கு முடிபு செய்தால், இன்னலுற்ற மேன்முறையீட்டாளர், பதிவு அலுவலரின் முடிபிலிருந்து ஒரு வாரத்தினுள் மீளாய்வு அலுவலருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பந்தியின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**4**. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர், விசாரணை மற்றும் தீர்ப்பு ஏதேனுமிருப்பின், அவற்றுக்குப் பின்னர் 3 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலில் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்களின் பெயர்களைக் கொண்டுள்ள குறைநிரப்பு இடாப்பொன்றைத் தயாரித்தலும் சான்றுபடுத்துதலும் வேண்டும் என்பதுடன், அப்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய இடாப்பை இறுதி யாக்குதலும் வேண்டும்: குறைநிரப்பு இடாப்பு.

ஆயின், பதிவு அலுவலர், மீளாய்வு அலுவலருக்கான மேன்முறையீடொன்று முடிவுறாதிருக்கும்போது குறைநிரப்பு இடாப்பைச் சான்றுபடுத்தலாம் என்பதுடன், அதன்பின்னர் அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டதன் மேல் மீளாய்வு அலுவலரின் முடிபுக்கிணங்க எவரேனுமாளின் பெயரை அத்தகைய இடாப்பில் பதிதலும் அல்லது அதிலிருந்து நீக்கிவிடுதலும் வேண்டும்.

**5**. (1) குறைநிரப்பு இடாப்பில் எவ்வாளின் பெயர் காணப்படுகின்றதோ அவ்வாள் எவரும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடாப்புக்களில் அவரது பெயரைப் பதிந்து கொள்வதற்கு அவர் தகைமையுடையவராகவிருக்கலாம் என்பது எவ்வாறிருப்பினும், வேறேதேனும் தேருநர்கள் இடாப்பில் அவரது பெயரைப் பதிந்து கொள்வதற்கு அவர் உரித்துடையவராதலாகாது. தவறுகள்.

(2) ஆளெவரும், அவரது பெயரை அதே இடாப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பதிந்து கொள்வதற்குத் தகைமையுடையவராகவிருக்கலாமென்பது எவ்வாறிருப்பினும், அவ்வாறு பதிந்து கொள்வதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவ்வாளின் பெயர் குறைநிரப்பு இடாப்பில் காணப்படுகின்றதோ அவ்வாளின் பெயர் வேறேதேனும் தேருநர்கள் இடாப்பிலும் காணப்பட்டு அத்துடன் அவ்வாள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களில் தமது வாக்கைப் பயன்படுத்தினால், அவர்

தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காகப் பொய்யான தகவலை அல்லது போலியான ஆவணங்களைக் கொடுத்துதவுகின்ற 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள், தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓராண்டை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*சட்டத்தின் நடைமுறைக் காலப்பகுதி.*

**6**. இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து தொடங்குகின்ற நான்காண்டுக் காலப்பகுதியொன்றுக்கு இச்சட்டம் வலுவிலிருத்தல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**8**. இச்சட்டத்தில் -

"தேர்தல் ஆணைக்குழு" என்பது, அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்" என்பது, வட மாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிந்தவரும், பயங்கரவாதி போராளி அல்லது வேறு குழுவினரின் ஏதேனும்

நடவடிக்கையின் காரணமாக 2009, மே 18 ஆந் தேதிக்கு முன்னரான எந்நேரத்திலும் தமது வதிவிடத்தை விட்டுச் செல்வதற்கு வலுக்கட்டாயப் படுத்தப்பட்டவரும் அல்லது கடப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டவரும் மற்றும் வடமாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்தில் தமது தொடக்க வதிவிடத்துக்கு வெளியே தற்போது இலங்கையில் வதிகின்றவரும் அல்லது 2012 ஆம் ஆண்டுக்கான தேருநர்கள் இடாப்பின் மீளாய்வு எத்தேதியன்று தொடங்கியதோ அத்தேதிக்குப் பின்னர் தமது தொடக்க நிரந்தர வதிவிடத்தில் மீளக் குடியமர்ந்துள்ளவருமான இலங்கைப் பிரசை யொருவர் என்று பொருளாகும்;

“பதிவு அலுவலர்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

“நடைமுறையிலுள்ள இடாப்பு” என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

“மீளாய்வு அலுவலர்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*